பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

வலம்புரி
VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1455)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 30 திங்கட்கிழமை (12-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 55

## இலண்டனில் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் வீட்டை இனந்தெரியாதோர் தாக்கினர்!

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் லண்டன் வாசஸ்தலம் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது அவரது வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவரது கார் தாக்கப்பட்டு பலத்த சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் குறித்துஇலண்டன் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை யடுத்து பொலிஸார் இச்சம்பவத்தின் சூத்திரதாரிகள் குறித்து தகவல்களைப் பெற

(→ 8ஆம் பக்கம் பார்க்க

## சிற்றி ஒவ் றிங்கோ நாளை புறப்படும்

(யாழ்ப்பாணம்)

''சிற்றி ஒவ் றிங்கோ'' பயணிகள் கப்பல் நாளை 400 பயணிகளுடன் காங்கேசன் துறையிலிருந்து திருமலை நோக்கிப் புறப்படும்.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கு பயண அனுமதிபெற்றவர்களுக்கு, இன்று காலை முதல் பயணச் சீட்டுக்கள் யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள மணியம் சட்டிடத்தில் இயங்கும் ரான் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுமென்று ரான்அதிகாரி எஸ் குகராஜன் தெரிவித்துள்ளார். (இ

## ★ எரிக்சோல்ஹெய்ம் இவ்வாரம் கொழும்பு வருகிறார்

# புலிகளைபிரிட்டன்தடைசெய்தாலும் சமாதானபேச்சைபாதிக்கமாட்டாது!

## ஜனாதிபதி கருத்து

(நமது அரசியல் நிருபர்)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நோர்வேயின் விசேட தூதுவர் மீண்டும் இவ்வாரத்தில் எந்நேரமும் கொழும்பு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாதம் 24ம் திகதிக்கு முன் அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஒரு கட்டப் பேச்சுவார்த்தையை ஆகுதல் நடத்தியே தீர வேண்டுமென்ற குறிக்கோளுடன் தூதுவர் எரிக் சோல் ஹெய்ம் கொழும்பு வரவிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகளை தடை செய்தாலும் அது பேச்சுவார்த்தையைப் பாதிக்கமாட்டாது என்று ஜனாதிபதி சந்திரிகா கருத்துத் தெரிவித்துள்ள இவ்வேளையில் தூதுவரின் கொழும்பு வருகை முக்கியத்துவம் பெறுவதாகவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இரண்டாவது தடவையாக அறிவித்துள்ள ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தம் இம்மாதம் 24 ம் திகதியுடன் முடிவடைய இருப்பதால் அத் திகதிக்குள் நோர்வே முன்வைத்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருசாராரும் ஒப்பம் இடுவதற்கான முயற்சியில் இருதரப்பினருடனும் அடுத்தடுத்து பேச்சுக்கள் நடத்தி தீர்க்கமான முடிவுடனேயே நோர்வேத் தூதுவர் கொழும்பு வருகிறார்.

தூதுவரின் கொழும்பு வருகைக்கும், ஜனாதிபதி சந்தி

→8ஆம் பக்கம் பார்க்க

## குழாய்க்குள் கிடந்த பாம்புதீண்டிசிறுமிமரணம்

வீட்டில் அனாதரவான நிலையில் கிடந்த குழாய் ஒன்றுக்குள் கையை விட்டு விளையாடிய மூன்று வயது சிறுமி ஒருவர் விஷப்பாம்பு தீண்டிமரணமான பரிதாபகரமான சம்பவமொன்று யாழ் நகரப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. கடந்த சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் ஐந்து சந்திக்கு அண்மையில் இடம் பெற்ற இச் சம்பவத்தில்யோகநாதன்விதுஷா (3 வயது) என்ற சிறுமியே மரணத்தை தழுவிக் கொண்டவராவார்.

இச் சம்பவம் பற்றி ( 8 ஆம் பக்கம் பார்க்க )

## காணாமல் போன இருபடையினரும் மீண்டனர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் தென்மராட்சிப்பகுதியில் கடந்த மேமாதம் மேற்கொள்ளப்பட்ட ஓயாதஅலைகள் இராணுவ நடவடிக்கையின் போது சோரன்பற்றுப் பகுதியில் காணாமல்போன இரண்டு இராணுவத்தினர் மீண்டும் திரும்பியுள்ளனர்.

→8ஆம் பக்கம் பார்க்க

## நோர்வே பிரதி அமைச்சர் இலங்கைக்கு வருவார்

(லண்டன்)

நோர்வேயின் பிரதி வெளிநாட்டமைச்சர் மிஸ்சிச்சன் மொடக்லால் இவ்வார இறுதிக்குள் இலங்கைக்கு வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் காணப்படும் முட்டுக்கட்டை நிலைகள் மற்றும் அரசியல் நிலைப்பாடுகள் குறித்து பேச்சு நடத்துவதே இவரது விஜயத்தின் நோக்கமென்றுதெரிவிக்கப்படுகிறது.

இவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் முக்கிய

→8ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர்களுக்கு வருடாந்தம் 139கோடி ரூபா செலவாகும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் இடம்பெற்றுள்ள 44அமைச்சர்களுக்கும் 38பிரதி அமைச்சர்களுக்குமானவருடாந்த நிர்வாகச் செலவு 139கோடிரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

பொதுஜனஐக்கிய முன்னணிஅரசில் பலவேறுபட்ட அரசியல்கட்சிகள் இடம்பெற்றிருப்பதனால் அக்கட்சிகள் அனைத்திற்கும் அமைச்சர் பதவிகளும், பிரதிஅமைச்சர் பதவிகளும் வழங்கப்படவேண்டியிருந்ததால்தான் அமைச்சர்களதும் பிரதி அமைச்சர்களதும் எண்ணிக்கை

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

நேற்று முன்தினம் எழுது மட்டுவாழ் பகுதியில் இடம் பெற்ற இராணுவத்தினரின் வலிந்த தாக்குதலின் போது

★ அன்புமகள்
(அருந்தவராசா நகுலேஸ்வரி)
யாழ்மாவட்டம்

என்றபோராளித மது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

## 600 படையினருக்கு எதிராக வழக்கு?

(கொழும்பு)

நாட்டில் காணாமல் போனோர்தொடர்பாக600படையினருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1994ம் ஆண்டில் இருந்து காணாமல் போன இளைஞர்கள், யுவதிகள் தொடர்பாக 600 படையினர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (வ)

## இலங்கை அரசுக்கு பாகிஸ்தான் கடன் உதவி

(கொழும்பு)

பாகிஸ்தான் அரசு இலங்கைக்கு மேலும் 20 மில்லியன் டொலரைக் கடனாக வழங்கப் போவதாக அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கெதிரான போருக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்த நிதியுதவி வழங்கப்படுவதாக அந்த நாடு தெரிவித்துள்ளது

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொருள் விலை ஏற்றத்திற்கு சீரற்ற போக்குவரத்தே காரணம்

## பொருளியல் ஆசிரியர் கருணாகரன்கருத்து

யாழ்ப்பாணத்திற்கும் வெளியிடத்திற்குமான சீரான போக்குவரத்து இன்மையாலேயே பொருட்களை அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நுகர்வோர் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு பொருளியல் ஆசிரியர் வே. கருணாகரன் கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ் இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற முழுநிலாக் கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்துரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்காவிலிருந்து இலங்கைக்குப் பொருட்களை கப்பல்மூலம் எடுத்துவரும் செலவிலும் பார்க்க கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருட்களைக் கொண்டுவருவதற்கு அதிக செலவு ஏற்படுகிறது

பாதுகாப்பு கெடுபிடிகள் கப்பல்பயணத்திற்கான கட்டுப்பாடுகள் போன்றவற்றால் கொழும்பு-யாழ்ப்பாண சேவையில் பொருட்களை ஏற்றி இறக்கும் கப்பல்கள் ஒரு பயணத்திற்காக நீண்ட நாட்கள் செலவிடுகின்றன

இதனால் கப்பல் கம்பனிகளும் அதிக கட்டணத்தை அறவிட வேண்டியுள்ளது என்று கூறினார். (ந-12)

## மட்டு. அமபாறை மாவட்டங்களில்

# காணாமல் போனவர்களில் 73 பேரின் தகவல் இல்லை

(கொழும்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் காணாமல் போனவர்களில் 73 பேரைப் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்விரு மாவட்டங்களிலும் கடந்தவருடம் 377 பேர் காணாமல் போயுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தது

இவ்வாறு காணமல்போனவர்களில் சிலர் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டும் உள்ளனர்.

இதேவேளை மன்னார் மாவட்டத்திலும் கடந்த வருடம் 12 பேர் காணாமல் போய் உள்ளதாக பிரஜைகள் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-4)

## கிழக்குப் பல்கலை மாணவர்களால்

# ஒரு லட்சம் பேரின் கையெழுத்துடன் பிரித்தானியாவிற்கு மகஜர்

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களினால் ஒரு லட்சம் பேர்களின் கையெழுத்து பெறப்பட்ட மகஜர் ஒன்று பிரித்தானியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களை தனித்தேசிய இனமாக அங்கீகரிக்கும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றினை ஏற்படுத்துவதற்கு பிரித்தானியாவும், சர்வதேச சமூகமும் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும்,

தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் பிரித்தானியா சேர்க்கக் கூடாது என்றும் அம் மகஜரில் வலியுறுத்தப் பட்டுள்ளது. (செ)

# செயலாளர்கள் பங்குபற்ற முதலமைச்சர்கள் அனுமதி

(கொழும்பு)

மாகாண சபைகளின் செயலாளர்கள், மற்றும் உயர் அதிகாரிகளை மாதத்தில் இரு நாட்கள் கொழும்பில் நடைபெறும் மத்திய அரசின்அமைச்சர்கள மற்றும் அதிகாரிகளின் கூட்டங்களுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்குவதென மாகாணசபை முதலமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

சபறணையில் நேற்று நடைபெற்ற மாகாணமுதல்வர்கள் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது

இத்தீர்மானத்தின் படி மாதத்தின் முதலாவது, மூன்றாவதுவெள்ளிக்கிழமைகளில் மாகாண சபைகளின் செயலாளர்கள், மற்றும் அதிகாரிகள் கொழும்புக்குச் செல்ல ஒதுக்கப்படவுள்ளதாகவும், எதிர் வரும் மார்ச் முதலாம் திகதி முதல் இப்புதிய நடைமுறை அமுலுக்கு வர இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ந-4

## சமாதானம் வேண்டி 17 ஆந் திகதி

# கத்தோலிக்க தேவாலயங்களில் மணி ஒலித்து விசேட பிரார்த்தனை

(கொழும்பு)

அமைதியும் சமாதானமும் ஏற்பட வேண்டும் என்பதற்காகஎதிர் வரும் 17ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் மணிகள் ஒலிக்கப்பட்டு விசேடவழிபாடுகள் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை கத்தோலிக்க திருச்சபை செய்துள்ளதாக மன்னார் ஆயர் அதிவண இராயப்பு ஜோசப் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடரும் யுத்தம் நிறுத்தப்பட்டு அமைதியும் சமாதானமும் ஏற்பட வேண்டி நிகழ்த்தப்படும் இப் பிரார்த்தனை படையினரின் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளிலும் நடைபெறவுள்ளது

இதனையொட்டி கத்தோலிக்க திருச்சபை துண்டுப் பிரசுரங்களையும், விளம்பரப் பதாதைகளையும் வெளியிட்டுள்ளது.

இதேவேளை மடுமாதா திருச்சொரூபம்மூன்று வார காலம் விசேஷ வழிபாட்டிற்காக பவனியாக தென் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

# உரும்பிராய் வீடியோகடை தீயில் எரிந்து நாசம்!

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சந்தியில் உள்ள ''சிந்து வீடியோ விஷன்'' நிலையம் தீப்பற்றி எரிந்ததால் அங்கிருந்தபுடைப் படச்சுருள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் (ஊரடங்கு வேளையில்) இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது பொதுமக்களும் இராணுவத்தினரும் சிரமப்பட்டு தீயை அணைத்ததினால் அருகில் இருந்த கடைகளில் தீ பரவாமல் காப்பாற்றப்பட்டது.

இத் தீ அனர்த்தத்தினால் 300 ற்கும் மேற்பட்ட படச்சுருள்கள் எரிந்து சாம்பலாகியுள்ளது.

மின் ஒழுக்கு காரணமாக இத் தீவிபத்து ஏற்பட்டதாக தெரியவருகிறது. (வ)

# மாசியப்பிட்டி பாலத்தால் பயணிகள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

மாசியப்பிட்டிப் பகுதியில் தூர்ந்து போன வீதி மூடு பாலத்தால் மக்கள் பெரும் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர்

மாசியப்பிட்டி சண்டிலிப்பாய் பொதுச் சந்தைக்கு அருகில் அமைந்துள்ள இப் பாலம கடந்த 8 மாத காலமாக ஒருபகுதி உடைந்த நிலையில் காணப்படுகிறது.

இதனால் வாகனப் போக்குவரத்துக்கு தடைப்படுவதுடன் எஞ்சிய பகுதி எப்பொழுது இடியுமோ என்ற அச்சத்துடனேயே மக்களும் வாகன சாரதிகளும் அப் பகுதியால் பிரயாணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. (ந 7)

## புலிகளுடன் பேசுவதற்கு

# இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவை இந்தியா வற்புறுத்த வேண்டும்

## பழ நெடுமாறன் கோரிக்கை

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி சந்திரிக்காவை இந்தியா வலியுறுத்தவேண்டுமென்று தமிழர் தேசிய இயக்கம் தலைவர் பழநெடுமாறன் கூறியுள்ளார்.

ஈரோபில செய்தியாளர்களுக்கு அளித்த செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு பழநெடுமாறன் கூறியுள்ளார்

அந்தச் செவ்வியில், இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வே நாடு தலையிட்டு சமரசப் பேச்சுக்கான முயற்சியை எடுத்துள்ளது இந்நிலையில் அதனை வரவேற்று விடுதலைப்புலிகள் தாமாகவே முன்வந்து யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளார்.

இதனை சந்திரிகா அரசு ஏற்பதற்கு மறுத்துவிட்டது.

இந்நிலையில்நோர்வேநாட்டின் சமாதான முயற்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ள இந்தியா, ஜனாதிபதி சந்திரிகாவை பேச்சுவார்த்தையில் ஈடுபட வலியுறுத்த வேண்டுமென்றும் கேட்டுள்ளார். (ந-5)

# மூக்குக் கண்ணாடி விற்பனையில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மூக்குக் கண்ணாடி விநியோகிக்கும் சில நிலையங்கள் பொருத்தமற்ற கண்ணாடிகளை விற்பனை செய்வதாக தெரியவருகிறது.

யாழ் போதனா வைத்திய சாலையின் கண் சிகிச்சைப் பிரிவினரால் கண் பரிசோதிக்கப்பட்டு உரிய கண்ணாடி எழுதி வழங்கப்படுகின்ற போதிலும், சில மூக்குக் கண்ணாடி விநியோகஸ்தர்கள் பொருத்தமற்ற கண்ணாடிகளை வழங்குவதாக சம்பந்தப்பட்டோர்புகார் தெரிவித்துள்ளனர்.

பொருத்தமற்ற கண்ணாடி என்பதால் அதனை மாற்றித் தருமாறு கேட்கும் போது அதனை மறுத்துவரும் இவர்கள் புதிதாகக் கண்ணாடியை வாங்குமாறும் வற்புறுத்துவதாகவும் தெரியவருகிறது. (ந-12)

# ஆசிரியர்களுக்கு வான சாஸ்திர பயிற்சி

(கொழும்பு)

ஆசிரியர்களுக்குவான சாஸ்திரம் தொடர்பான பயிற்சிகளை வழங்கும்திட்டம் ஒன்றைகொழும்புகோள்மண்டலம் மேற்கொண்டுவருகிறது.

இதற்கென ஆசிரியர்களைக் கொண்ட அமைப்பொன்றும் ஏற்படுத்தப் பட்டுள்ளதாக கொழும்பு வான்மண்டலப் பணிப்பாளர் ரி.சி.சமரநாயக்கதெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களுக்கு வான சாஸ்திரப்பயிற்சிகளை வழங்கும் திட்டத்தின் மூலம் மாணவர்களுள் வானசாஸ்திரம் தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ளமுடியும் என்றும் அவர்மேலும்தெரிவித்துள்ளார். (ந-4)

# விமான நிலையத்தில் விஷேட கருமபீடம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் விஷேட கருமபீடங்கள்திறக்கப்பட்டு அதில் தமிழ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்கின்ற மற்றும் இலங்கை வருகின்ற தமிழ் பேசும் பயணிகளின் நன்மை கருதியே இவ் விஷேட கருமபீடங்கள் விமான நிலையத்தில் திறக்கப்பட்டுள்ளன. (செ)

## வடக்குக்-கிழக்கு மாகாணத்தில்

# உள்ளூராட்சி சபைகளுக்கான நிதிஒதுக்கீடு 50 வீதத்தால்குறைப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண சபையினால்மூலதனப் பிரமாணத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியில் இவ்வருடம் 50 சதவீதம் குறைத்தே வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மூலதனப் பிரமாணத் திட்டத்தின் கீழ் வருடாந்தம் மாநகர சபைகளுக்கு தால 20 லட்சம் ரூபாவும் நகர சபைகள், மற்றும் பிரதேச சபைகளுக்கு தலா 10 லடசம் ரூபாவும் வழங்கப்பட்டுவந்தன.

ஆனால் இவ்வருடம்மாநகர சபைகளுக்கு தலா 10 லட்சம் ரூபாவும், உள்ளூராட்சி மன்றங்களுக்கு தலா ஐந்து லட்சம் ரூபாவும் வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை உள்ளூராட்சி மன்றங்கள் கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட நிதியின் அடிப்படையில் இவ்வாண்டுக்கான திட்டங்களை தயாரித்த நிலையில், நிதி வெட்டப்பட்டிருப்பதால் இப்போதுஎந்தத் திட்டத்தைக் கைவிடுவதென்று தெரியாது தடுமாற்றம் அடைந்துள்ளன. (ந-4)

# எந்தச் சதி முயற்சியாலும் ரணில் ஜனாதிபதியை வெல்ல முடியாது!

## அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளும் எந்தவொரு சதி முயற்சியாலும் அரசியலில் ஜனாதிபதியை தோல்வியடையச்செய்ய முடியாது. இவ்வாறுஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உதவிச் செயலரும், அமைச்சருமான, மங்கள சமரவீர வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில், மேலும் அறிவிக்கப்பட்டுள்ளதாவது, ரணில் விக்கிரமசிங்க எதிர்க் கட்சித் தலைவர்என்ற ரீதியில் நாட்டு மக்களின் நன்மைக்காக உழைப்பதே அவரது தார்மீக கடமையாகும்.

ஜனாதிபதியை தோல்வியடையச் செய்ய முடியாதென்பதை புலிகளேஒப்புக்கொண்டுள்ளனர். இந்நிலையில் கடந்த 7 வருட காலத்தில் நடந்து முடிந்த பத்துத்தேர்தல்களில் தோல்வியடைந்த ஐக்கிய தேசியக் கட்சியால் ஜனாதிபதியை எவ்வகையிலும் தோற்கடிக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

## 2003இல் இலங்கையிலும் நிலநடுக்கம் ஏற்படும்

(கொழும்பு)
இந்தியாவில் மீண்டும் பூகம்பம் ஏற்படுமென எதிர்வு கூறிய இலங்கையின் பூகோளவியலாளரான லலித் விஜேயவர்த்தனா 2003ம் ஆண்டில் இலங்கையிலும் பூமி அதிர்வு ஏற்படுமென எதிர்வு கூறியுள்ளார்

இந்திய மாநிலமான குஜராத்தில்மீண்டும் பூமியதிர்ச்சி ஏற்படுமென விஜேயவர்த்தனாகூறி 21நாட்களில் அங்கு நிலநடுக்கத்தின் அறிகுறிகள் தென்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது

இதே வேளை, இன்னும் ஓரிரு மாதங்களில் பாகிஸ்தானிலும் நிலநடுக்கம் ஏற்படுமெனஅவர் எச்சரிக்கை செய்துள்ளார். (ந-6)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம் மாதம் 11 - ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 176832 ஏ | 178668 ஏ |
| 178668 பி | 178668 சி |
| 178668 டி | 179263 ஏ |
| 179271 ஏ | 179271 பி |
| 179271 சி | 179271 டி |
| 179293 பி | 179293 சி |
| 179376 ஏ | 179376 பி |
| 179376 சி | 182592 ஏ |
| 182608 ஏ | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 146025 ஏ | 150982 ஏ |
| 150982 பி | 150982 சி |
| 150982 டி | 150982 ஈ |

### கரவெட்டி

| | |
|---|---|
| 155004 ஏ | 155004 பி |
| 158106 ஏ | 160137 ஏ |
| 160137 பி | 160137 சி |
| 162162 ஏ | 162162 பி |
| 162163 ஏ | 162163 பி |
| 162163 சி | 162271 ஏ |
| 162271 பி | 164694 ஏ |
| 164694 பி | 164694 சி |
| 164857 ஏ | 164857 பி |
| 164857 சி | 164860 ஏ |
| 164947 ஏ | 164947 பி |
| 165073 ஏ | 165077 ஏ |
| 165280 ஏ | 165280 பி |
| 167223 ஏ | 167226 ஏ |
| 167226 பி | 169577 ஏ |
| 169577 பி | 169577 சி |
| 172192 ஏ | 172192 பி |
| 172192 சி | 172396 ஏ |
| 172396 பி | 172396 சி |
| 172396 டி | 172451 ஏ |
| 172452 ஏ | 172452 பி |
| 172573 ஏ | 172573 பி |
| 172573 சி | 174395 ஏ |
| 176037 ஏ | 176058 ஏ |
| 176058 பி. | 176058 சி |
| 176096 ஏ | 176096 பி |
| 176097 ஏ | 176097 பி |
| 176145 ஏ | 176220 ஏ |
| 176243 ஏ | 176243 பி |
| 176243 சி | 176243 டி |
| 176243 ஈ | 176354 ஏ |
| 176423 ஏ | 176502 ஏ |
| 176502 பி | 176508 ஏ |
| 176508 பி | 177581 ஏ |
| 177581 பி | 177581 சி |
| 177608 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 152280 ஏ | 152280 பி |
| 154465 ஏ | 154465 பி |
| 154533 ஏ | 154533 பி |
| 155533 சி | 159640 ஏ |
| 159640 பி | 163962 ஏ |
| 163669 ஏ | 163669 பி |
| 163669 சி | 163689 ஏ |
| 163692 ஏ | 163705 ஏ |
| 163705 பி | 163724 ஏ |
| 163776 ஏ | 163776 பி |
| 163776 சி | 163787 ஏ |
| 163794 ஏ | 163794 பி |
| 167093 ஏ | 167093 பி |
| 167093 சி | 168188 ஏ |
| 168188 பி | 168188 சி |
| 168190 ஏ | 168190 பி |
| 168190 சி | 168190 டி |
| 168241 ஏ | 168241 பி |
| 168241 சி | 168253 ஏ |
| 168289 ஏ | 168289 பி |
| 168289 சி | 168289 டி |
| 168299 ஏ | 168299 பி |
| 168302 ஏ | 168302 பி |
| 168309 ஏ | 168309 பி |
| 168345 ஏ | |

### மருதங்கேணி

| | |
|---|---|
| 176306 ஏ | 176306 பி |
| 176306 சி | 177554 ஏ |
| 177554 பி | 177556 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 175196 ஏ | 175196 பி |
| 175196 சி | 175196 டி |
| 175196 ஈ | 179058 ஏ |
| 179058 பி | 179187 ஏ |
| 181618 ஏ | 182638 ஏ |
| 182638 பி | 182716 ஏ |
| 182716 பி | 182716 சி |
| 182812 ஏ | 182841 ஏ |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 122229 ஏ | 122229பி |
| 122229 சி | 142664 ஏ |
| 158080 ஏ | 162239 ஏ |
| 162239 பி | 164431 ஏ |
| 146431 பி | 146431 சி |
| 164431 டி | 146431 ஈ |
| 164795 ஏ | 164795 பி |
| 164795 சி | 164795 டி |
| 167314 ஏ | 172199 ஏ |
| 172199 பி | 174323 ஏ |
| 174323 பி | 174323 சி |
| 174223 டி | 174670 ஏ |
| 174670 பி | 174670 சி |
| 174670 டி | 176251 ஏ |
| 176251 பி | 176251 சி |
| 176251 டி | 176345 ஏ |
| 176345 பி | 176345 சி |
| 176358 ஏ | 176358 பி |
| 176358 சி | 177544 ஏ |
| 177544 பி | 177606 ஏ |
| 177606 பி | 177606 சி |
| 177606 டி | 177632 ஏ |
| 177632 பி | 177648 ஏ |
| 177648 பி | 177648 சி |
| 177648 டி | 177648 ஈ |
| 177648 எவ் | 177686 ஏ |
| 177716 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 169190 ஏ | 179457 ஏ |
| 179493 ஏ | 179493 பி |
| 181463 ஏ | 181463 பி |
| 181463 சி | 181571 ஏ |
| 181571 பி | 181577 ஏ |
| 181593 ஏ | 181593 பி |
| 181623 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 179308 ஏ | 179308 பி |
| 167308 ஏ | 167308 பி |
| 167308 சி | 167308 டி |

### உடுவில்

| | |
|---|---|
| 177766 ஏ | 178892 ஏ |
| 178892 பி | 180667 ஏ |
| 181437 ஏ | 181437 பி |
| 181582 ஏ | 181628 ஏ |
| 181639 ஏ | 182616 ஏ |
| 182616 பி | 182668 ஏ |
| 182859 ஏ | 182859 பி |
| 182859 சி | 182859 டி |

## இராசி பலன்

12-2-2001
(தை 30, திங்கள்)
பஞ்சமி பி இ 4 14 வரை
அத்தம் பி.ப 3.46 வரை
இராகுகாலம் 8 34- 10.02
சுபநேரம் 1.02- 2 32
சித்தம்.

**மேடம்**
நோய் குணமடையும், முயற்சி விருத்தி, தனவரவு, பனமகிழ்ச்சி.

**இடபம்**
புத்திரரால்கவலை, முயற்சி தாமதம், பிரயாணத் தடங்கல், வியாதி.

**மிதுனம்**
உறவினர் மனஸ்தாபம், தடுமாற்றம், காரிய தாமதம், தாய் வழி உறவு.

**கடகம்**
அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, இனிய சம்பவம், முயற்சி கைகூடும்.

**சிங்கம்**
பொருள் விரயம், கௌரவக் குறைவு, முயற்சி மந்தம், விவாதம்.

**கன்னி**
ஆழ்ந்த சிந்தை, ஜனவசியம், காரிய ஜெயம், புதிய பொருள் சேர்க்கை.

**துலாம்**
பிரயாணம், தனவிரயம், சயன சுகக்குறைவு, உணர்ச்சி வசப்படல்.

**விருச்சிகம்**
நண்பர்கள் சந்திப்பு, பொருள் வரவு, முயற்சி கைகூடும், கௌரவம்.

**தனுசு**
பெரியோர் சந்திப்பு, முயற்சி பலிதம், தொழில் சிறப்பு, மனக் கவலை.

**மகரம்**
பிரயாணம், வயிற்றுக் கோளாறு, காரிய தாமதம், உடலுழைப்பு.

**கும்பம்**
எதிர் பாராத பிரச்சினை, முயற்சி தடங்கல், வியாதி, அமைதிக் குறைவு.

**மீனம்**
வாகன வசதி, விருந்துபசாரம், தனவரவு, சுவாரசியம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## மட்டு மாவட்டத்தில் தொற்று நோய் பரவல் நான்கு பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
மட்டக்களப்பு மாவட்ட வாகரைப்பிரதேசத்தில் காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் காரணமாக கடந்த ஒரு வாரத்தில்மட்டும் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இத் தொற்று நோய்கள் பரவியுள்ளதாகவும், இந் நோயினால் பாதிக்கப்பட்டபலர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப் படுகிறது. [செ]

## தபால் அதிபர் தரம் 2 சித்தியடைந்தோர் விபரம்

(சுண்டுக்குளி)
1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தபால் திணைக்களத்தால் நடத்தப்பட்ட தரம் 2 தபால் அதிபர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை பெறுபேறு அண்மையில்வெளிபாகியது இதில் சித்தியடைந்தவர்களின் பெயர் விபரமும் அவர்கள் கடமையாற்றும் தபாலகங்களும் வருமாறு:

எ றோஜர் பேர்க்கன் (யாழ். தபாலகம்), எஸ் பி பேட்டன் (யாழ் தபாலகம்), நே. தவகுலநதன் (யாழ். தபாலகம்), ரி சிவபாலன் (யாழ் தபாலகம்), பி. எம். இம்மனுவேல் (ஆனைக்கோட்டை), ஜி யோகராஜா (அல்லைப் பிட்டி), எ. கனகபாலன் (சண்டிலிப்பாய்), பி சிவசுப்பிரமணியம் (காங்கேசன் துறை), என். புஸ்பராசா (தெல்லிப்பழை), எஸ் பிறேமன் (அளவெட்டி), ரி. ராஜேந்திரம் (காரைநகர்) பி. அகமணிதேவர் (வல்வெட்டித்துறை), என். லோகநாதன் (சுன்னாகம்). பி தயாபரன் (பண்டத்தரிப்பு), திருமதி ரி. கிறிஸ்னேஸ்வரி (விளான்).

இவர்களுக்கான நேர் முகப் பரீட்சை விரைவில் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

(ந-1'0)

### அச்சுவேலி தபாலகத்திற்கு புதியகட்டடம்

(யாழ்ப்பாணம்)
அச்சுவேலி பிரதான தபாலகத்திற்கு விரைவில் நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

மேற்படி தபாலகம், வசதிகள் குறைந்த நிலையில் தனியார் கட்டிடம் ஒன்றில் இயங்கி வருவதையடுத்து, நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கென வலி கிழக்கு பிரதேசசபை தனக்குச் சொந்தமான காணியில் ஒருபகுதியை வழங்க முன்வந்துள்ளது [ந-2]

### அதிசயம்: ஆனால் உண்மை

## ஒன்றரை மாதகுழந்தையின் வயிற்றினுள் ஆண் சிசு

(யாழ்ப்பாணம்)
ஒன்றரை மாத வயதுடைய ஆண் குழந்தையின் வயிற்றினுள் 500 கிராம் எடையுடைய ஆண் சிசு வளர்ந்திருந்த அதிசய சம்பவம் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குழந்தையின் வயிற்றை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்த பொழுது கட்டி ஒன்று இருப்பது கண்டறியப்பட்டது. அக்கட்டியை அகற்றுவதற்காக சத்திரசிகிச்சை செய்யப்பட்ட போது தாயின் கற்பத்தில் இருப்பது போன்று தண்ணீர்க் குடப்பைக்குள் இந்தக்கரு இருந்த அதிசயம் தெரியவந்துள்ளது.

இதுபற்றி அவ் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் வை குலசேகரா கருத்துக் கூறுகையில் மன்னார் மாவட்டம் விடத்தல் தீவைச் சேர்ந்த ஞானமலர் மரியதாஸ் என்ற பெண் சுமார் ஒன்றரை மாதத்திற்கு முன்னர் அக்கராயன் குளம் வைத்தியசாலையில் ஆண் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார் குழந்தை நலமாக இருந்த போதிலும் நாள் செல்லச் செல்லகுழந்தையின் வயிறு பெரிதாக வருவதை பெற்றோர் அவதானித்தனர். இதன் காரணமாக குழந்தையை முழங்காவில் வைத்தியசாலைக்கு அனுமதித்தனர். அங்கிருந்த வைத்தியர்களால் வயிறு வீக்கத்திற்கான காரணத்தை கண்டுபிடிக்க முடியவில்லை

இந்நிலையில் அக் குழந்தை வவுனியா, மல்லாவி, அனுராதபுரம் போன்ற வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு பின் கொழும்பு லேடி ரிஜ்ட்வே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது

பின்னர் மருத்துவ சிகிச்சை மூலம் வயிற்றில் கட்டி ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு கடந்த சனிக்கிழமை 3 ஆம் திகதி சத்திரசிகிச்சை நடைபெற்றது.

இச் சத்திரசிகிச்சையின் போது வயிற்றுள் கரு ஒன்று உயிர்துடிப்புடன் இருப்பதைடாக்டர்கள் கண்டு அதனை வெளியில் எடுக்க முற்பட்டனர்.

இக்கரு தண்ணீர்ப்பையினுள் இருந்தனாலும் குழந்தையின் வயிறும் சிறிதாக இருந்ததனாலும் தண்ணீர்ப்பை உடைக்கப்பட்டு கரு மாத்திரம் மீட்கப்பட்டது.

ஒரு குழந்தைக்கு இருக்க வேண்டிய கை, கால் போன்ற அத்தனை உறுப்புகளும் இருந்ததாகவும், சத்திரசிகிச்சை செய்யப்படும் பொழுது கரு உயிருடன் இருந்ததாகவும் டாக்டர் குலசேகரா மேலும் தெரிவித்தார்

சத்திரசிகிச்சையின்பின்னர்கருவைசுமந்துகொண்ட குழந்தையும் நலமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ந-7)

# யாழ். மாவட்ட கல்வி வலயங்களுக்கிடையே இடமாற்றம் பெறும் ஆசிரியாகளின் விபரம்

யாழ். மாவட்டக் கல்வி வலயங்களுக்கிடையே இடமாற்றம் பெறும் 76 ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளையினால் வெளியிடப்பட்டுள்ளது. அவர்களின் விபரங்கள் வலயரீதியாக வருமாறு.

யாழ்ப்பாண கல்விவலயத்திலிருந்து தீவகக் கல்வி வலயத்திற்கு மாற்றம் பெறும் ஆசிரியர்களின் விபரம் வருமாறு.

திருமதி ஆ. கணேசலிங்கம் யா/நல்லூர் இ. த. பெ. பா.

திருமதி எஸ். முத்துக்குமாரசாமி யா/யாழ். இந்து ஆரம்ப பா.

திருமதி க. ஜ. ஜெயக்குமார் யா/புனித சாள்ஸ் ம. வி.

திருமதி ஜி. பரந்தாமன் யா/முத்துத்தம்பி ம. வி.

திருமதி எம். விஜகுமார் யா/வண்ணை நாவலர் வித்தி.

எஸ். கருணாகரன் யா/கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி

திருமதி ரோ. போலஸ்கந்தன் யா/யாழ். இந்துமகளிர் கல்லூரி

திருமதி எஸ். நந்தகுமார் யா/சன்மார்க்க ம. வித்தி.

எவ். ஜே. ஜெயக்குமார் யா/கனகரட்ணம் ம. ம. வி.

த. முத்துலிங்கம் யா/பாசையூர் சென் அன்ரனீஸ்

ஆர். மன்மதராஜா யா/செங்குந்தா இந்துக்கல்லூரி

திருமதி பி. சிவகுமாரன் யா/ஆனைப்பந்தி மெ. மி. த. க. பாடசாலை

செல்வி வி. வேலாயுதபிள்ளை யா/நல்லூர்ஞானோதயா வித்தி.

செல்வி எம். மங்களராஜேஸ்வரி யா/அரியாலை ஸ்ரீ பார்வதி

செலவி பி. மனோரஞ்சினி யா/யாழ். இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை

ஆர். தபநாதன் யா/கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை

திருமதி ஆர். சுபேந்திரதாஸ் யா/திருநெல்வேலி ஜி. த. க. பாடசாலை

திருமதி ஜீவானந்தம் யா/கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தி.

திருமதி ஏ. விமலன் யா/நல்லூர் காசிப்பிள்ளைவித்தி.

எஸ். கி. ஜோசப் அனுரா யா/புனித மரியாள் வித்தி.

எஸ். பரமேஸ்வரன் யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

திருமதி ஏ. செங்கதிர்ச்செல்வன் யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி

ஏ. லூ. புவிராஜசிங்கம் யா/புனித ஜேம்ஸ் ஆ. பாடசாலை

திருமதி பி. பாரதிதாசன் யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

திருமதி மே. யோ. ஜெயராஜா யா/புனித மரியாள் வித்தி.

லா. ய. அன்ரனிற்றா யா/புனித மரியாள் வித்தி.

திருமதி பு. ஞானசம்பந்தன் யா/கன்னியர்மடம் ம. வி.

திருமதி ரி. எவ். றூமன் யா/கன்னியர்மடம் ம. வி.

திருமதி நா. சுகிர்தலிங்கம் கொழும்புத்துறை துரையப்பா வித்தி.

எஸ். கங்காதரன் யா/பாசையூர் சென்அன்ரனீஸ்

திருமதி பி. எஸ். ஜசிந் யா/கன்னியர்மடம் ம. வி.

திருமதி கு. இராஜேந்திரன் யா/நல்லூர் இ. த. பெ. பா.

தீவகக் கல்வி வலயத்திலிருந்து யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்கு மாற்றம் பெறும் ஆசிரியர்களின் விபரம் வருமாறு.

இ. ரவிச்சந்திரன் யா-நாரந்தனை கணேச வித்தி

திருமதி ஏ ஜே. ஆர் சஞ்ஜேபெனடிக் யா-புனித மரியாள பெண்கள்.

திருமதி செ. அருள்நேசன் யா-புனித மரியாள் பெண்கள்

திருமதி நொ. ஜே. ஞானதாசன் யா-நாரந்தனை றோ. க.

திருமதி இ. இலட்சுமிப்பிரபா யா-புங்குடுதீவு கமலாம்பிகை

க. சிவபாலன் யா-வேலணை சேர். வைத்திலிங்கம்

திருமதி ம. மகேந்திரன் யா-புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தி

திருமதி கி. பிரான்சிஸ் யா-அல்லைப்பிட்டி பராசக்தி

செல்வி கு. திலகவதி யா-அல்லைப்பிட்டி பராசக்தி.

திருமதி வா. தவபாலன் புங்குடுதீவு மகாவித்தி.

த. சிவானந்தன் யா-புங்குடுதீவு மகாவித்தி.

செல்வி செ. எ சுபாசினி யா-புங்குடுதீவு மகாவித்தி.

திருமதி வா. பரமநாயகம் யா-கலாநிதி ஆ. தியாகராஜா ம. வித்தி

திருமதி க கேதீஸ்வரசர்மா யா-கரம்பொன் சண்முகநாத ம. வித்தி.

செல்வி து. பத்மபூசணகுமாரி யா-வேலணை சேர் வைத்திதுரை ம. ம. வித்தி.

திருமதி ஸ்ரீ. சிவஞானம் யா-கரம்பொன் சண்முகநாத.

தீவகக் கல்வி வலயத்தில் இருந்து வலிகாமம் கல்விவலயத்திற்கு மாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு.

திருமதி செல்வநாயகம் யா-வேலணை தெற்கு ஐயனார்.

ப. சுதானந்தராஜா யா-ஊர். புனித மரியாள் பெண்கள் பாடசாலை.

திருமதி சண்முகரத்தினம் யா-அல்லைப்பிட்டி பராசக்தி.

செல்வி வ. கணேசன் யா-யாழ்ரன் கல்லூரி.

திருமதி. கி. ஸ்ரீக்குமார் யா-புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தி.

திருமதி ந. கனகநாயகம் யா-மண்டைதீவு மகாவித்தி.

செல்வி க. சுவாசினி யா-சரவணை நாகேஸ்வரி.

திருமதி கி. சிறீகாந்தா யா-கரம்பொன் சண்முகநாத ம வித்தி.

செ. நடேசகாந்தன் யா-புங்குடுதீவு மகா வித்தி.

வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து தீவகக் கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம்.

ஜே. ஜெயமோகன், யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

திருமதி பி. யோகதாசன் யா/ வட்டு மத்திய கல்லூரி.

திருமதி வி. கருணாகரன் யா/ ஆனைக்கோட்டைறோ.க

செல்வி கே. காசிலிங்கம் யா/சுதுமலை வடக்கு அ. த. க

திருமதி பி மகேந்திரன் யா/ தாவடி இ. த. க. பாடசாலை.

செல்வி வி. இராசதுரை யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

ரி. திலீபன் யா/ புனித கென்றியரசர் கல்லூரி.

ந குமணன் சுதுமலை வடக்கு ஆறுமுக வித்தியாலயம்.

செல்வி கே. கந்தையா யா/ இணுவில் இந்துக்கல்லூரி

செல்வி கே. குலசுந்தரி யா/ வட்டு மத்திய கல்லூரி

நா. இந்திரநேசன் யா/ வட்டு திருநாவுக்கரசு.

கே. மனோகர் யா/ பென்னாலை வரதராஜப் பெருமாள்.

அருமைநாதன் யா/ உடுவில் அ. மி. த. க பாடசாலை.

## கற்பித்தல் செயற்பாடு பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் 32 ஆயிரத்தி 400 மாணவர்களுக்கு 630 ஆசிரியர்கள் மட்டும் கல்வி கற்பிக்கிறார்கள் மேலும் 970 ஆசிரியர்கள் இவ் வலயத்திற்கு தேவையாக உள்ளனர்.

இதனால் கற்பித்தல் செயற்பாடுகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (செ-2)

## சமுர்த்தி செயலணி அங்குரார்ப்பணக் கூட்டம்

(ஆவரங்கால்)

ஆவரங்கால் மேற்குப் பகுதிக்கான சமுர்த்தி செயலணி அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டம் மேற்படி பகுதி சமுர்த்தி முகாமையாளர் தலைமையில் நடைபெற உள்ளது. இதில் கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ள உள்ளனர். (செ-57)

# வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் தலைவிரித்தாடுகிறது

## பிரித்தானிய தூதுவர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

வடக்குக்-கிழக்குமாகாணத்தில் தொடரும் யுத்தத்தினால் விவசாயம், கைத்தொழில் என்பன வெகுவாகப் பாதிக்கப்பட்டு பெரும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக பிரிட்டிஸ் உயர் ஸ்தானிகர் லிண்டா டபீல்ட் தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாக கணவன்மாரை இழந்துள்ள பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற சமூகப் பிரச்சினைகளும் தலைவிரித்தாடுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப்பணிகளை பார்வையிடுவதற்காக அங்கு விஜயம்ஒன்றைமேற்கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். [ந-4]

## நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகள்

(சுண்டுக்குளி)

யாழ். ஜோண் பொஸ்கோ வித்தியாலய வருடாந்தஇல்ல மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த 9ம்-திகதி வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் அருட்செல்வி ஜி செல்வராணி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம தீர்ப்பாளர்களாக கப்டன் டி. எ. எம். குணசிங்கம், எல். எஸ். ரி. அம்புறோஸ், திருமதிஎன். சிவசுப்பிரமணியம் ஆகியோரும் தொடக்குனராகரி. சிவகுமாரும் கடமையாற்றினார்கள்.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் ஆர். குமாரவடிவேல் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எ. இராஜகோபால், யுவானியார் பங்குத் தந்தை ஆர். என். ஜி. நேசநாயகம் அடிகளாரும் கலந்து கொண்டனர்.

இப் போட்டிகளை திருமதி சோ. வி. ஜ. வி. ஜோர்ச் நெறிப்படுத்தினார். (ந-110)

## இந்தியச் சிறையில் உள்ள 13 இலங்கை மீனவர்கள் உண்ணாவிரதம் இருப்பர்

(கொழும்பு)

இந்தியச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் ஒன்றினை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக நீர்கொழும்பு மீனவர் சமூக ஒத்துழைப்பு அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலத்தில் உள்ள மட்டன் சேரி சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பதின்மூன்று மீனவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தே இவ் உண்ணாவிரதத்தினை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

தங்களை உடனடியாக விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்வதுடன்,

அதுவரையும் சிறையில் போதிய அடிப்படை வசதிகளைப் பெற்றுத் தரவேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

சிறையில் இருக்கும் இம் மீனவர்களுக்கு குடிநீர் வசதி கூட கிடைப்பதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. [செ]

## ஒழுங்கீனமாக நடக்கும் எம்.பிகள் மீது நடவடிக்கை

### சபாநாயகர் அனுரா எச்சரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்ற சட்ட திட்டங்களுக்கு முரணான வகையிலும் பாராளுமன்றத்தில் ஒழுங்கீனமாகவும் நடந்து கொள்ளும்உறுப்பினர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா கடந்த வெள்ளியன்று பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் 26-ஆம் திகதிகூட்டுறவு நிறுவன சட்டமூல விவாதத்தின் போது ஆளும் கட்சித் தரப்பில் இருந்து எதிர்க் கட்சித்தரப்பு மீது ஒலிவாங்கிகள், கண்ணாடி, தம்ளர்கள் வீசி எறிந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-தி)

## துன்னாலை வாசி லண்டனில் மரணம்

(மந்துவில்)

துன்னாலை வாசி ஒருவர் இலண்டனில் இடம்பெற்ற விபத்தொன்றில் சிக்கி மரணமடைந்துள்ளார்.

செல்வராசா காந்தன் என்பவரே கடந்த முதலாந் திகதி மரணமடைந்தவராவார். (ந-39)

## இலங்கையில் 13 வது குடிசனத்தொகை கணக்கெடுப்பு ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையில் பதின்மூன்றாவது தேசியகுடிசனத்தொகை கணக்கெடுப்பு வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப கட்டமாக சகல வீடுகள் கட்டடங்கள் ஆகியவற்றின் புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

குடிசன மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக கிராம சேவையாளர்கள் தத்தமது பகுதிகளில் உள்ள வீடுகள் கட்டடங்களுக்கு விஜயம் செய்து விபரங்களைத் திரட்டுமாறு குடிசன மதிப்பீட்டு புள்ளி விபர திணைக்களம் பணித்துள்ளதாகத் தெரிய வருகிறது. (செ-9)

## ஆறு வருடங்கள் கடந்தும் நிரந்தர நியமனம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் பல வருடங்களாக கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

யாழ். மாவட்டத்தில் உள்ள 7 பிரதேச செயலகங்களில் 1994 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் இருந்து தொழில் நுட்ப உத்தியோகத்தர் தரம் II 'ஆ' பிரிவில் நியமனம் வழங்கப்பட்ட 7 பேருக்கே இவ்வாறு 6 வருடங்கள் கழிந்த நிலையிலும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் உள்ளது. (உ-ந)

# சாத்வீகப் போராட்டத்திற்கு அரசு வழங்கிய 'வன்முறைப்' பதிலே இன்றைய ஆயுதப் போராட்டம்!

(வவுனியா)

தமிழ் மக்களுக்கு எதிரான அரசினது நோக்கங்களுக்கு மேலாக அவற்றிற் கெதிரான சாத்வீகப் போராட்டங்களுக்குக் கொடுக்கப்பட்ட வன்முறையான பதில்களே தமிழ்மக்களைப் போராடத் தூண்டியது என மன்னார் கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் அருட் திரு எமிலியாஸ்பிள்ளை தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக பொங்கு தமிழ் நிகழ்வின் நோக்கம்பற்றி கருத்து தெரிவித்தபோதே எமிலியாஸ் பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எந்த ஒரு மனிதனுக்கும், மனித குழாமிற்கும் சாத்வீகமுறையில் தமது அபிலாசைகளை வெளிப்படுத்தும் உரிமை உண்டு.

இந்த உரிமை மதிக்கப்பட்டு கோரிக்கைகள் செவிமடுக்கப் படாவிட்டால் அது பாரதூரமான விளைவுகளுக்கும் வழிவகுக்கும்.

தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையையும், அது சார்ந்த அரசின் கோரிக்கைகளையும் நிறைவேற்றக் கூடியதாகவும், ஒரு நியாயமான அரசின் தீர்வே தமிழ்மக்களின் ஏகோபித்த கோரிக்கை என்பதை உலகிற்கு வெளிப்படுத்துவதே யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் பொங்குதமிழ் நிகழ்ச்சியின் நோக்கமாகும் என்றார்.

[ம

## இன்று ஒரு தகவல்

# நல்லோர் தொடர்பு நன்று

ஓர் ஊருக்கு ஒரு சாமியார் வந்தார் அவர் நன்றாகப் பேசக் கூடியவர். சத்சங்கத்தைப் பற்றி அடிக்கடி வற்புறுத்திச் சொல்வார். அவர் அன்று சில நண்பர்களை அழைத்து ''நான் ஓர் அற்புதம் செய்து காட்டுகிறேன்'' என்றார். அவர்கள் ''என்ன அற்புதம்?'' என்று கேட்டார்கள். அவர் அவர்களை ஒரு குளத்தங்கரைக்கு அழைத்துச் சென்றார். ஒரு சிறிய கல்லை எடுத்துக் குளத்தில் போட்டார். அது நீரில் அமிழ்ந்து விட்டது. ''கல் எங்கே'' என்று சாமியார் கேட்டார். ''நீரில் அமிழ்ந்து விட்டது'' என்றார்கள் அருகில் இருந்தவர்கள். ''கல் நீரில் மிதக்குமா?'' என்று கேட்டார் சாமியார். ''மிதக்காது'' என்று விடை வந்தது. ''இத்தனை சிறிய கல்லே நீரில் அமிழ்ந்து விட்டதே. ஒரு பெரிய கல்லைத் தண்ணீரின் மேல் மிதக்கச் செய்ய முடியுமா? என்று கேட்டார் சாமியார். ''முடியவேமுடியாது'' என்றார்கள் மற்றவர்கள்.

''நான் மிதக்கச் செய்கிறேன். அந்த அற்புதத்தைத் தான் இப்போது செய்து காட்ட எண்ணுகின்றேன்'' என்று சாமியார் சொன்னதைக் கேட்டு எல்லோரும், ''அது எப்படி முடியும்'' என்று தமக்குள் யோசிக்கத் தொடங்கினார்கள். சாமியார் ஒரு பெரிய குண்டுக்கல்லைக் கொண்டுவரச் சொன்னார். சிலர் அதை உருட்டிக் கொண்டு வந்தார்கள். ''நீங்கள் எல்லோரும் வீட்டுக்குப் போய் விட்டு ஒரு மணிநேரம் கழித்து வாருங்கள் அந்த அற்புதத்தைக் காண்பீர்கள்,' என்றுகூறி அவர்களை அனுப்பி விட்டார் சாமியார்.

அவருடன் இரண்டு சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்களிடம் அங்கே கிடந்த பெரிய கட்டையை உருட்டிக் கொண்டு வரச் சொன்னார். அதைக் குளத்திற்குள் உருட்டச் செய்தார். அது குளத்தில் மிதந்தது. அதன் மேல் அந்தக் குண்டுக் கல்லைத் தூக்கி வைக்கும்படி சொன்னார். அவ்வாறே செய்தார்கள். கட்டை சிறிது தண்ணீரில் ஆழ்ந்தாலும், அதன் மேல் இருந்த கல் அமிழவில்லை. ஒருமணி நேரம் கழித்து ஊர் மக்கள் வந்தார்கள். சாமியார் செய்யும் அற்புதத்தைக்காண வேண்டும் என்ற ஆர்வத்தோடு வந்தார்கள். வந்து குளத்தைப்பார்த்தார்கள். குண்டுக்கல் ஆழாமல் மிதந்ததைக் கண்டார்கள். ஆனால் ஆச்சரியப்படவில்லை. ''இது தானா'' என்றார்கள். ''முன்னே போட்ட சிறியகல் தண்ணீருக்குள் அமிழ்ந்ததா? மேலே மிதந்ததா? என்றுகேட்டார் சாமியார். அமிழ்ந்து போயிற்று என்றார் ஒருவர். இந்தப் பெரிய கல் அமிழ்ந்ததா? இல்லை, ஆனால்----? ஆனால் என்பதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம், கல் அமிழ்ந்துபோகாமல் நீரின் மேல் இருக்கிறதா? இல்லையா? என்று கேட்டார் சாமியார், ''ஆம் இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லையே! கட்டைமிதக்கிறது. அதன்மேல் கல் இருப்பதனால் அது நீரில் அழிழவில்லை என்றார்கள். அப்படியானால் கல் கட்டையாக மாறிற்றா? அதன் கனம் குறைந்து விட்டதா? என்றார் சாமியார். ''இல்லை'' எயன்றார்கள் மற்றவர்கள். கல் கல்லாகவேயிருந்தாலும் கட்டையின் சார்பினால் நீரின்மேல் மிதக்கிறது அல்லவா? ஆம்.

இப்படித்தான் இயல்பாகப் பிரபஞ்சச் சேற்றில் அமிழ்கிற தன்மை படைத்தவராக ஒருவர் இருந்தாலும், அதில் அமிழாமல் மிதக்கும் சாதுக்களைச் சேர்ந்தால், அவர் பிரபஞ்சச் சேற்றில் ஆழாமல் இருக்கும் வழிபிறக்கும். என்றார் சாமியார் இப்போது சாமியார் பேச்சைக் கேட்டு யாவரும் வியந்தார்கள். கல் தனியாக இருப்பதனால் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் குறைந்த கனமுடையதானாலும் தண்ணீரில் அமிழ்ந்து விடும். ஆனால் எவ்வளவு கனமுள்ள கல்லானாலும் மிதக்கும் கட்டையோடு சேர்ந்தால் அதுவும் மிதக்கும் அதுபோல் எவ்வளவு பொல்லாதவர்களாக இருந்தாலும் நல்லவர்களைச் சேர்ந்தால், அவர்களும் அறியாமை என்னும் நீரில் ஆழமாட்டார்கள். சத்சங்கம் அவ்வளவு சிறப்பானது என்று சாமியார் சொன்னார்.

நன்றி
தெய்வீகக் கதைகள்

# சித்திரவதை குறித்து விசாரணை ஆரம்பம்!

(கொழும்பு)

வடக்கு கிழக்குப்பகுதிகளில் காரணம் எதுவுமின்றி ராணுவத்தினராலும் பொலிசாரினாலும் கைதுசெய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் மோசமாக துன்புறுத்தப்படுவதாக கிடைத்த முறைப்பாடுகளையடுத்துவிசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளதாக தேவையற்றகுற்றச்சாட்டைச்சுமத்தி அப்பாவி பொதுமக்களை இராணுவத்தினரும் பொலிஸாரும் சித்திரவதைசெய்து துன்புறுத்துவதாக பலமுறைப்பாடுகள் எழுத்துமூலமும், வாய்மூலமும் எமக்கு கிடைத்துள்ளது.

இம் முறைப்பாடுகள் தொடர்பாக பிரதிப்பொலிஸ் மாஅதிபர்கள், மற்றும் பொலிஸ் அத்தியட்சகர்களிடம் மனித உரிமை ஆணைக்குழுவினர் தொடர்பு கொண்டபோதும் தகுந்த பதில் அவர்களிடமிருந்து கிடைக்கவில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இம்முறைப் பாடுகள் தொடர்பாக விசாரணை அறிக்கை விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படுமென்று மனிதஉரிமை ஆணைக்குழுவின் தலைவர் பாயிஸ் முஸ்தபா தெரிவித்துள்ளார். (இ)

## 46 லொறிகளில் உணவுப் பொருள்

(கொழும்பு)

வன்னியில்விடுவிக்கப்படாத பகுதிகளுக்கு கடந்த ஒருவாரத்தில் மட்டும் 46 லொறிகளில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

(ந-4)

## சுன்னாகத்தில் கற்பகம்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் ''கற்பகம்'' விற்பனை நிலையம் ஒன்று சுன்னாகத்தில் திறக்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச்சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(உ-12)

## தேர்தல் கடமைக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது தேர்தல் கடமை புரிந்த வடமராட்சி கல்வி வலய ஆசிரியர்கள் எவருக்கும் தேர்தல் கடமைக்கான கொடுப்பனவு இது வரை வழங்கப்படவில்லை என ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஏனைய கல்வி வலய ஆசிரியர்களுக்கு இக் கொடுப்பனவுகள் ஏற்கனவே வழங்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## மீளக் குடியமர விருப்பம்

[தென்மராட்சி]

வியாழக் கிழமை கைதடி பிரதேசத்திற்கு வீடு பார்க்கச் சென்றவர்களில் முன்னூற்று முப்பத்து மூன்று குடும்பங்கள் அங்கு மீளக் குடியேறவிருப்பம் தெரிவித்திருப்பதாக தென்மராட்சி பிரதேசசெயலர் கு. சுந்தரம் பிள்ளைதெரிவித்தார்.

[உ-77]

## மன்னாரில் 25 தமிழ் இளைஞர்கள் கைது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 25 தமிழ் இளைஞர்கள் கடற்படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த 1ம் திகதி முதல் 5ம் திகதி வரை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கைகளின் போது இவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 25 தமிழ் இளைஞர்களும் மன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுதொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ம)

## கண்காட்சி

(மண்கும்பான்)

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் வேலணை பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் மனையியல்கைப் பணிக் கண்காட்சி நயினாதீவு மகாவித்தியாலயத்தில் வேலணை பிரதேச செயலாளர் செ. இரத்தினம் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்ஜே.எக்ஸ்.செல்வநாயகம், கௌரவ விருந்தினராக வேலணை பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி ஆகியோரும் கலந்து கொள்ள வுள்ளனர். மேற்படி கண்காட்சி இரு தினங்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-83)

# மாணவர் சீருடை மார்ச் மாதத்தில்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான இவ்வாண்டுக்கான சீருடைகள் மார்ச் மாதத்திற்கு முன்னர் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந் தெரிவித்துள்ளார்.

சுமார் 80 கோடி ரூபா செலவில் 44 லட்சம் மாணவர்கள் இச் சீருடைகளைப் பெறவுள்ளனர்.

இதற்கென சீனாவிலும், உள்ளூரிலும் துணி கொள்வனவு செய்யப்பட்டு ஊறுகொடவத்த களஞ்சியத்தில் வைக்கபபட்டுள்ளது.

(வ)

## களனிப் பல்கலை

# மாணவர் அலுவலகம் நாசகாரரால் தீ வைப்பு

(கொழும்பு)

களனிப் பல்கலைக்கழக மாணவர் அலுவலகம் இனந்தெரியாதோரால் தீவைத்துக் கொழுத்தப்பட்டுள்ளது.

இத் தீவிபத்தினால் பல இலட்சம் ரூபாபெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளது.

இப்பல்கலைக் கழகம் இன்று திறக்கப்பட விருந்தபோதும், இத் தீவிபத்துச் சம்பவத்தினால் திட்டமிட்டபடி இன்று திறக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(செ)

# மாதிரிவிவசாயப்பண்ணை 3 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த மாதிரி விவசாயப் பண்ணைகள் நிறுவுவதற்கென மூன்று இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உடுவில், சண்டிலிப்பாய், புலோலி, கரவெட்டி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் அமைபவுள்ள மேற்படி மாதிரி விவசாய பண்ணைகளுக்காக ஒவ்வொன்றுக்கும் 75 ஆயிரம் ரூபா வீதம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. (ந-உ)

# கரப்பந்தாட்ட போட்டி சென்.அன்ரனீஸ் சம்பியன்

(சுண்டுக்குளி)

நெடுந்தீவு பிரதே செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழக அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் ஆண்கள் பிரிவில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி, சென் ஜோன்ஸ் விளையாட்டுக்கழக அணியை இருநேர்செற்றுக்களில் 25:23, 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இவ்வருட சம்பியன் ஆனது.

பெண்கள் பிரிவில் சென் ஜோன்ஸ் அணி அதனை எதிர்த்தாடிய பல்துறை அணியை 27: 25, 25: 12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இவ்வருட சம்பியன் ஆனது.

ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டிக்கு வி.ரி. செல்வராஜா, கே. விஜிதரன் ஆகியோர்மத்தியஸ்தர்களாக கடமை ஆற்றினார்கள்.

(செ-101)

## திருமலை செல்லும்

# உதைபந்தாட்ட அணியின் இறுதித் தெரிவு இன்று

(சுண்டுக்குளி)

திருமலை செல்லவிருக்கும் யாழ் மாவட்ட உதைபந்தாட்ட அணியின் இறுதித் தெரிவு இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற உள்ளது.

இது வரை பயிற்சியில் பங்கு கொண்ட வீரர்கள் இன்று நடைபெற உள்ள இறுதித் தெரிவிற்கு தவறாது சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி எ. எவ். ஜெ. ரூபசிங்கம் கேட்டுள்ளார்.

இன்றைய பயிற்சியில் பங்கு பற்றுபவர்களே எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெற உள்ள பயிற்சி முகாமில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(செ)

## பலஸ்தீன அமைப்பு ஏரியல் ஷரோனுக்கு எச்சரிக்கை

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் கடந்த வியாழக்கிழமை சக்திமிக்க கார்க் குண்டு ஒன்று வெடித்ததில் ஜெருசலேம் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

இக்கார்க்குண்டு வெடிப்பிற்கு இரு பலஸ்தீன அமைப்புக்கள் உரிமை கோரி உள்ளதாகத் தெரியவருகிறது.

இஸ்ரேலின் பிரதமராக ஏரியல் ஷரோன் தெரிவு செய்யப்பட்டதை விரும்பாதவர்களே இந்தாநசகாரச் செயலைச் செய்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

ஏரியல் ஷரோனுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையே இக் குண்டு வெடிப்பு என அக் குழுக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## அரிச்சல் முனையில் இறக்கி விடப்பட்ட 27 ஈழத் தமிழ் அகதிகள்

(சென்னை)

தனுஷ்கோடிக் கரையில் இறக்கி விடுவதாகக் கூறி படகுகள் மூலம் ஏற்றிச் செல்லப்பட்ட 27 ஈழத் தமிழ் அகதிகள் தனுஷ்கோடிக்கு அண்மித்த பகுதியான அரிச்சல் முனையில் அநாதரவாக விடப்பட்ட சம்பவம் கடந்த வாரம் இடம் பெற்றுள்ளது.

ஒருவரிடம் ஐயாயிரம் ரூபாய்ப்படி அறவிட்டு படகுகளில் சென்ற படகோட்டிகள் தனுஷ்கோடி என்று கூறி அரிச்சல் முனையில் இவ் இருபத்தேழு பேரையும் இறக்கி விட்டனர்.

அரிச்சல் முனையில் அந்தரித்த நிலையில் இருந்த இவர்களை இந்திய கடற்படையினர் தனுஷ்கோடிக்கு அழைத்துச் சென்றுள்ளனர். (ந)

## பிலிப்பைன்ஸின் தொழிற்கட்சித் தலைவர் சுட்டுக் கொலை

(மணிலா)

பிலிப்பன்ஸின் இடதுசாரி தொழிற் கட்சித் தலைவர் பிலோமன் லக்மன்இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி குளோறியா அரோயோ இக் கொலையை வன்மையாகக் கண்டித்துள்ளார் இக்கொலைச் சந்தேக நபர்களை கைது செய்யும் படியும் உத்தரவிட்டிருக்கிறார்.

அத்துடன் கொல்லப்பட்ட லக்மன் குடும்பத்தினருக்கு கொலைகாரர்களைவிரைவில் கண்டுபிடித்து விடுவதாகவும் உறுதி அளித்துள்ளார். [செ-08)

## போராளிகள் தாக்குதலில் ஸ்ரீநகரில் 11 பேர் பலி

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின பிரதான கட்டுப்பாட்டுப் பகுதியான ஸ்ரீநகரில் காஷ்மீர் போராளிகள் குழு ஒன்றினால் மேற்கொளப்பட்ட தாக்குதலில் 9 இந்தியப் பொலிஸாரும் இரண்டு போராளிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஸ்ரீநகர் பகுதியின் கட்டடத் தொகுதி ஒன்றில் இடம் பெற்ற தாக்குதலில் ஈடுபட்ட இருவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டதாகச் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (செ-9)

## குகைக்குள் இருக்கும் வீரப்பனை பிடிக்க விஷவாயுப் பிரயோகம்

(புதுடில்லி)

அடர்ந்த கேரள வனப் பகுதியில் உள்ள குகையில் உள்ள வீரப்பனை விஷவாயுவைப் பிரயோகித்துப் பிடிக்கப் போவதாக தமிழக, கர்நாடகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமிழக, கர்நாடக பொலிஸாருக்கு சிம்ம சொப்பனமாகவிளங்கி வரும் சந்தனக் கடத்தல் வீரப்பன் கேரள வனக் குகைக்குள்பதுங்கியிருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததனாலேயே இந் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

வீரப்பனையும் அவனது சகாக்களையும் பிடிப்பதற்காக இரு மாநிலங்களும் கூட்டு அதிரடிப்படை அமைத்து தேடுதல் வேட்டை நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

### செய்திப்பரல்

★ லொக்கர்பீ குண்டு வெடிப்பில் தண்டிக்கப்பட்ட அல் - மக்ராஷி உண்ணா விரதத்தை மேற்கொண்டுள்ளார்.

★ சுமார் 140கோடிடொலர் பெறுமதியான ஆய்வு கூடமொன்று விண்வெளிநிலையம் நோக்கி ஏவப்பட்டுள்ளது.

★ அண்மையில் பிரேஸிலின் சாஓபோலோ நகரில் மின்னல் தாக்கியதால் ஐவர் கொல்லப்பட்டார்கள்.

★ அஹமதாபாத் நகரில் மீண்டும் ஏற்பட்ட பூமி அதிர்ச்சிகாரணமாக மக்கள் வீடுகளைவிட்டு வீதிக்கு ஓட்டம்பிடித்தார்கள்.

★ ஆபாச திரைப்படங்களை கண்டுபிடிப்பதற்காக தனியார் சி. ஐ. டி. இனை இந்தியத் தணிக்கை சபை ஏற்பாடு செய்துள்ளது.

★ பிரபல பாடகியும், நடிகையுமான டேல்ஈவன்ஸ் தனது 88 ஆவது வயதில் காலமானார். (செ-9)

## சுட்டவர் நிலை கவலைக்கிடம்

(வாஷிங்டன்)

அமெரிக்கஜனாதிபதியின் வெள்ளை மாளிகைக்கு முன்னால் துப்பாக்கிப்பிரயோகம் செய்த நபரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது

இந்நபர் வெள்ளை மாளிகைக்கு முன்னால் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது இவரைப் பிடிப்பதற்காக பொலிஸார் இவரின்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டனர்.

இதனால் இவரின் காலில் சத்திரசிகிச்சை மேற் கொள்ளப்பட்டு துப்பாக்கிச் சன்னம் அகற்றப்பட்டபோதிலும் இவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். (செ)

### உலக தரிசனம்

## குஜராத்தில் நில நடுக்கம்

(புதுடில்லி)

குஜராத்தின் பல்வேறுபகுதிகளில மீண்டும் நில நடுக்கம் நிகழ்ந்துள்ளதாக வானிலை அறிக்கை தெரிவித்துள்ளது

கடந்த வியாழன் நள்ளிரவு 12-6 மணி முதல் வெள்ளி பி ப 3 38 மணி வரையுள்ள இடைவெளியில் 13தடவைகள் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இது டிற்றர் அளவு கோலில் 4 5முதல் 3 0வரை பதிவாகியுள்ளது என வானிலை அவதானிகள் தெரிவித்துள்ளனர். இதன் போது குறைந்தது 25 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (ந-07)

## கப்பல்கள் மோதின

(வாஷிங்டன்)

அமெரிக்கஅணுசக்திநீர்மூழ்கிக்கப்பலொன்றுயப்பானிய ஆய்வுக் கப்பலுடன் மோதியதால கடலினுள் மூழ்கியது

மேற்படிநீர்மூழ்கிக் கப்பல் கடலின் மேற்பரப்பிற்கு வந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டது.

இவ் விபத்தின் போது நீர்மூழ்கிக் கப்பலில் இருந்த 15 கடற்படை வீரர்களும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். (ந-02)

## நாணய---

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேளையில் இச்செலாவணி மிதப்பானது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றே.

கடந்த இருவருடங்களில் எரிபொருளுக்கான விலை டொலர் பெறுமதியில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது பல்வேறுதேவைகளுக்கும் பயன்படும் எரிபொருளின் விலையேற்றத்தினால் பல பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன இக்காரணத்தாலும் போருக்கான செலவு கடந்த காலங்களில் 51 வீதமாக அதிகரித்ததினாலும், இலங்கையின் கடன் சுமை பாரிய அளவில் அதிகரித்தது. இலங்கையின் பொருளாதாரம் பெரும் மோசமான இன்றைய நிலைக்குதள்ளப்பட்ட மூன்று முக்கிய காரணங்களாகும். அதிலும் போருக்கானசெலவு 55 பில்லியனிலிருந்து 53 பில்லியனாக அதிகரித்ததே மிகமுக்கிய காரணியாகும் என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

### போரே பொருளாதாரம்

இந்தியா போன்ற நாடுகள் போரைப் பொருளாதாரமாகக் கொண்டுள்ளன. இதனால் அவர்கள் போர்த் தளபாட உற்பத்தியினால் தேசிய உற்பத்தி அதிகரித்துள்ளது. துர்ரதிஷ்டவசமாக இலங்கையானது போர் வீரர்களை மட்டும் உள்நாட்டிலே பெற்றுக் கொண்டும், போர்த் தளபாடங்களை இறக்குமதி செய்து அச்செலவுகளை தேசிய உற்பத்திக்குள் புகுத்தியுள்ளனர். தேசிய உற்பத்தியில் போர் உற்பத்திச் செலவானது கருகிப்போன உற்பத்தியாகவே காணப்பட்டுள்ளது. இதனால் இலங்கை பொருளாதாரம் மோசமாகப்பாதிக்கப்பட்டுள்ளது. இச் செலவுகளை அரசாங்கம் இவ்வளவு காலமும் சமாளித்து வந்துள்ளது ஒருசாதனையேதான், நாணயப் பெறுமதி மிதக்கவிடப்பட்டுள்ளது என்பது இது முதற் தடைவையில்லை, இலங்கை சுதந்திரமடைந்து 1967 ஆம் ஆண்டுவரையும் நிலையான நாணய மாற்று விகிதமும் 1967 முதல் 1977 வரை இரட்டை நாணய மாற்று விகிதமும் 1977 ஆம் ஆண்டு சுதந்திர பொருளாதார கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

முதல் 2001 ஜனவரி 23 வரை முகாமைப்படுத்தப்பட்ட நாணய மாற்று விகிதமும் அமுலில் இருந்து இன்று அதிலிருந்து விடுபட்டுள்ளது என்பதே இன்றைய சுதந்திரமாக நாணயத்தை மிதக்கவிட்டது என்பதாகும்

### சுதந்திரப் பொருளாதாரம்

1977 அரசு மேற் கொண்ட சுதந்திர பொருளாதார கொள்கை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வில்லை

தென்கொரியாவும் முதல் சுதந்திர வர்த்தக கொள்கையை அமுல்படுத்தியது அந்நாடுஇன்று16 ஆயிரம்டொலர் ஏற்றுமதி வருமானம் பெறும் அதேவேளை, இலங்கை இன்று 885 டொலரினையே ஏற்றுமதி வருமானமாக பெறுகின்றன. 1977 முதல் நாணயத்தின் பெறுமதி போரின் காரணமாக வீழ்ச்சியுற்ற போதும் மத்திய வங்கிச் சந்தையில் நாணயத்தின் பெறுமதியினை நிர்ணயித்ததினால் அத்தாக்கத்தினை அரசாங்கமே சமாளித்து வந்துள்ளது. 23 வருடங்களாக இச்செலவுகளை தனக்குள்ளே தாங்கிய இலங்கை அரசு இன்று அதன் தாக்கத்தினை மேலும் அனுபவிக்க முடியாமல் போயியுள்ளது

போர் மேலும் தொடர்ந்தால் இலங்கைப் பொருளாதாரம் மிக மோசமாக பாதிப்புற்றுக் கொண்டேயிருக்கும்.

## ஓநாய்களைச் சுட்டுக் கொல்ல நோர்வே அரசு அங்கீகாரம்

(ஒஸ்லோ)

நோர்வேயில் நூற்றுக்கு மேற்பட்ட செம்மறியாடுகளைத் தின்று ஏப்பமிட்ட 9 ஓநாய்களை சுட்டுக்கொல்வதற்கான அங்கீகாரத்தை நோர்வே அரசாங்கம் வழங்கியுள்ளது.

நோர்வேயின் கிழக்குக் காட்டுப் பகுதியில் வசிக்கும் இந்த ஓநாய்களை தேடிக் கண்டுபிடித்து வேட்டையாடும் நடவடிக்கைகள் இன்று முதல் ஏப்ரல் 4ம் திகதி வரை நடைபெறும்.

இப் பிராந்தியத்தில் 50 முதல் 80 வரையான ஓநாய்கள் வாழ்கின்ற நிலையில் 9 ஓநாய்களை வேட்டையாடுவதற்கு நோர்வே அரசு வழங்கியுள்ள அங்கீகாரத்திற்கு எதிராக கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன. (உ)

## ஒஸ்லோவில் அரசு- புலிகள் பேச்சுவார்த்தை பத்துத்தினங்களில் நடைபெறும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் எரிக்சோல் ஹெய்ம் இற்குமிடையிலான பேச்சு வார்த்தைகள் இன்னும் பத்துதினங்களுக்குள் ஒஸ்லோவில் ஆரம்பமாகும் என நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நோர்வே தயாரித்துள்ள புரிந்துணர்வு பொது நிலை அறிக்கையின் அடிப்படையில் இந்தப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகிறது.

இலண்டனில் தங்கியுள்ள எரிக்சோல் ஹெய்ம் அன்ரன் பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விபரங்களை எடுத்துச் சொல்வதற்காகவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சு வார்த்தை நடத்தவும் அடுத்த வாரம்கொழும்பிற்கு வரவுள்ளார்.

ஆனால் சோல் ஹெய்ம் வன்னிக்குச் செல்லமாட்டார் எனவும் அரசியல் வட்டாரங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

இதேவேளை பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதில் உள்ள இழுபறிநிலை ஓரளவு முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக நோர்வே தூதரக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக அறிய முடிகிறது. [செ]

சொலுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்
- குறள் -

# வலம்புரி

## அன்று ஜே ஆர் இன்று ரணில்

விலைவாசி ஏற்றம் பொருளாதாரத் தளம்பல் ஆகிய காரணங்களை முன் வைத்து அரசு பதவிவிலக வேண்டுமெனக்கோரி ஐக்கிய தேசியக்கட்சி நீண்ட தொருபாதயாத்திரையை நடத்தி முடித்துள்ளது பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆட்சியிலிருந்து கவிழ்த்து தான் ஆட்சிப் பீடம் ஏறுவதே இப்பாதயாத்திரையின் ஒட்டு மொத்தமான நோக்கமாக இருந்தாலும், உள்ளார்ந்தமான முக்கிய விடயங்களும் அதற்குள் பொதிந்திருப்பதைமறந்து விட முடியாது

ஐக்கிய தேசியக் கட்சி தமிழர்களின் விடயத்தில் அக்கறை உடைய ஒரு கட்சியாக இருந்தால் இனப் பிரச்சினையை உடனடியாக தீர்த்து வைப்பதை- அவசரகால சட்டத்தை ஒழிப்பதை - புலிகளின் யுத்த நிறுத்தத்திற்கு அமைய அரசு யுத்த நிறுத்தம் செய்யவேண்டியதன் அவசியத்தை -வலியுறுத்தி பாதயாத்திரையில் கோசம் எழுப்பியிருக்க முடியும்

உண்மையில் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கும், பொதுவிலை மட்ட உயர்வுக்கும் இனப்பிரச்சினையே அடிப்படைக் காரணம் எனவே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலமே ஐக்கிய தேசியக்கட்சி முன் வைத்த கோரிக்கைகளுக்குத் தீர்வுகாண முடியும். நிலைமை இவ்வாறு இருக்க ஐக்கியதேசியக்கட்சியின் பாதயாத்திரை உள்ளொன்று வைத்து புறமொன்று கூறுவதுபோல் அமைந்துள்ளது.

பாதயாத்திரையின் முடிவில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க மேஜர் ஜெனரல் ஜானகபெரேராவுக்கு சேவை நீடிப்பு வழங்காததை வன்மையாகக் கண்டித்துள்ளார். புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பெரும்பங்கு வகித்த ஜானக பெரோவுக்கு சேவை நீடிப்பு வழங்காத விவகாரம் ரணிலால் பாதயாத்திரையின் முடிவில் வெளிப்பட்டுள்ளதெனில், பாதயாத்திரையின் தொக்கி நிற்கும் நோக்கம் இனப்பிரச்சினைக்கு பொதுஜனஐக்கிய முன்னணி தீர்வுகாண்பதை தடுப்பதேயாகும்.

அன்றுபண்டா செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே. ஆர் ஊர்வலம் சென்றது போல் இன்று நோர்வேயின் சமாதான முயற்சி இறுகும் நிலையில் ரணில் பாதயாத்திரை நடத்தியுள்ளார் என்பதே உண்மை

# சமாதானப் பேச்சு ஒரு சம்பிரதாயமே!

# எதிர்பார்ப்புகள் நிறைவேற வழி பிறக்குமா?

பிரிட்டன் புலிகள் அமைப்பை தடை செய்ய வேண்டும் என்று இலங்கை அரசும், குறிப்பாக அதன் வெளியுறவு அமைச்சரும், சிஹல உறுமய கட்சியும், சில பத்திரிகைகளும் ஓரணியில் திரண்டு ஒற்றைக்காலில் நிற்கின்றன. மறுபுறம் தமிழ் கட்சிகளும், புலிகளியக்க முன்னணி அமைப்புகளும் 'தடை வேண்டாம்' என்று கோரி வருகின்றன. இது தொடர்பாக அவசர வேண்டுகோள்கள், அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதும், ஆதரவு தேடும் முயற்சிகளும், சந்திப்புக்களும், அவை தொடர்பான ஊடக விமர்சனங்களுமாக ஒரே அமர்க்களமாகவுள்ளது தடையினால் பாதிக்கப்படக் கூடியவர்களை விட சமாதானத்தை அடைந்தே தீருவது என்று பிரச்சாரம் செய்யும் அரச தரப்பினர் பெரும் அவசரம் காட்டுவது விசித்திரமாகவுள்ளது

### அனுசரணையாளர்

எப்பாடுபட்டாவது புலிகளை பிரிட்டனில் தடை செய்து விட வேண்டும். என்று கங்கணங்கட்டி நிற்பதன் பின்னணியில் கபடம் இருப்பதை எவரும் உணர்வர். எதிரியை பலவீனப் படுத்துவது, தனிமைப்படுத்துவது என்பன போர் உத்திகளேயன்றி நிரந்தர அமைதிக்கும் சமாதானத்திற்குமான உத்திகளல்ல. அனுசரணையாளராக செயற்பட முன்வந்த முதன்மை நாடு பிரிட்டன். சியம் பொக்ஸ் உடன்படிக்கை காலத்திலிருந்து சில ஆரம்ப நடவடிக்கைகளிலும் அது ஈடுபட்டிருக்கிறது. இப்பொழுது நோர்வே நாடு அனுசரணையாளராக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பினும், ஏதேனும் ஒரு காரணம் பற்றி நோர்வே அப்பொறுப்பிலிருந்து விலகினால் அல்லது விலக்கப்பட்டால், அனுசரணையாளராக செயற்படுவதற்கு இரு தரப்பினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் அடுத்த நாடு பிரிட்டன் ஆகும். அதற்கும் அடுத்ததாக தென்னாபிரிக்காவாக இருக்கும். காலனித்துவ எஜமானர்களாக இருந்தமையால் போத்துக்கல் மற்றும் நெதர்லாந்து எனப்படும் ஒல்லாந்துக்கும் கூட இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் முன்னுரிமையும், கடப்பாடும் உண்டு. இந்நிலையில் பிரிட்டனை கறைபடியாத ஒரு நடுநிலை நாடாக மதித்துப் பேணுவதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியது ஸ்ரீலங்காவினதும், புலிகளினதும் கடமையாகும் அமைதிக்கும் சமாதானத்திற்குமான விருப்பம் இதயத்திலிருந்து எழும் பட்சத்தில் இதுவே நடைபெறுவதாக இருக்கும்.

**யூகி**

### சமாதானத்தில் வெறுப்பு

சமாதானத்திலுள்ள வெறுப்பை மனதில் வைத்துக் கொண்டு ஒரு சம்பிரதாயத்திற்காக சமாதான ஏற்பாடுகளை செய்தலாகாது. ஒரு போராயுதமாகவும் பயன்படுத்தலாகாது. குரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு வெளி வேடத்திற்கு சமாதானம் பேசினாலும், அச் சமாதானம் 'தற்செயலாக' கிடைத்தாலும் அல்லது திணிக்கப்பட்டாலும் அதன் பின்னரும் குரோத நடவடிக்கைகள் தொடரும் என்பதற்கான அறிகுறியாகவேயிருக்கும். வெளியுறவு அமைச்சர் புலிகளை பிரிட்டன் தடை செய்யா விட்டால் உறவுகளில் பாதிப்பு ஏற்படும் என்று மிரட்டுவதானது, சண்டையிலீடுபட்டுள்ள இருதரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனுசரணையாளர்களை அல்லது தேவையேற்படின் மத்தியஸ்தம் வகிக்கக் கூடியவர்களை அப்பொறுப்பிலிருந்து விலக்கி, விரட்டி விடும் கபட முயற்சிகளாகும். எல். ரி. ரி. ஈ 1992 இல் தடைசெய்த இந்தியா இன்று மத்தியஸ்தம் வகிக்கும் தார்மீக அந்தஸ்தை இழந்து நிற்கிறது. ஆகவே நடுநிலை நாடுகளிடம் புலிகளை தடை செய்யும்படி கேட்பது இதயத்தில் சமாதானத்தை விரும்பாதவர்கள் அதற்கெதிராக செய்யும் சதியாகும்.

### துரும்புச்சீட்டு

தமிழ் மக்களின் பிரச்சினையை மூலதனமாகவைத்து அரசியல் நடத்தும் பாரம்பரியம் இங்கு உண்டு பெரும்பான்மை பிரச்சினையாகவுள்ள பாராளுமன்றத்தின் ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்சினை என்ற துரும்புச் சீட்டைக் கையில் தயாராக வைத்திருக்காமலிருப்பதை விரும்ப முடியாது அடுத்த தேர்தலில் குறியாயிருப்பவர்கள் தானே அரசியல்வாதிகள். இதனால் தான் சமாதானம் எங்கிருந்து வலியுறுத்தப்படக்கூடுமோ அந்த வழிகளை அடைத்து விடப் பெரும்பாடு படுகின்றனர். இந்தியாவோ, அமெரிக்காவோ புலிகளை தடை செய்தது போன்ற அதே காரணங்களுக்காக பிரிட்டனும் தடை செய்யலாமென்று சிந்திப்பதில் தவறிருக்கின்றது காலணித்துவ நாடாக விருந்து 150 வருடங்கள் ஆட்சி செய்த நாடு பிரிட்டன் தான் செய்தவற்றிற்கு பரிகாரம் தேடாமல் வெறுமனே சட்டரீதியான தர்க்கங்களுக்கு அடிபணிந்து முடிபுகள் செய்வது பொருத்தமற்றது. இதனால் அமெரிக்கா தடைசெய்த அமைப்புகளை பிரிட்டனும் தடைசெய்ய வேண்டும் என்ற நிலைப்பாடும் ஆதாரமற்றது.

### பரிகாரம் காணல்

சிஹல உறுமய கட்சி. கண்டிச்சிங்களவரின் காணிகளை பிரிட்டன் சுவீகரித்தமைக்கெதிராக இப்பொழுது வழக்கு தாக்கல் செய்வதற்கு ஆயத்தமாகி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. காலணித்துவ எஜமானான பிரிட்டன். இன்னும் சிங்களமக்களுக்கே [illegible]காணவேண்டிய நிலையில் உள்ளது என தெரிகிறது. இரண்டாம் உலகப்போரில் உயிரியல் வாயுவை பரப்பி நூற்றுக்கணக்கானவர்களை அழித்தமைக்கு வேறு நாட்டவரால் நட்டஈடு கோரி இப்பொழுதும் ரோக்கியோவில் வழக்கு நடைபெறுகின்றது. சிறுபான்மை மக்களின் நிலத்தையும் ஆட்சியையும் பறித்து பெரும்பான்மை மக்களிடம் கொடுத்துவிட்டு, அதனாலேற்படும் அழிவுகளையும் இரு சமூகங்களையும் ஏற்கும் படி வைத்திருக்கும் பிரிட்டிஷ் அரசு இதற்காக தமிழர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கும் தார்மீகப் பொறுப்பை ஏற்க வேண்டும்,

ஒருநாடு பிளவுபடுவதை விரும்பாத நாடுகளேதமிருப்பின் அவை சமாதானப் பேச்சுக்களை ஆதரிப்பதற்கு கிடைத்த வாய்ப்பைத்தவற விடலாகாது. எம்மீது தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் கௌரவமாகவும், சம அந்தஸ்துடனும் பேச்சுக்களில் கலந்துகொள்ள முடியுமா என்ற நிலைப்பாட்டினை புலிகள் உரியநேரம் வரும்போது அறிவிப்பார்கள் என்று பத்திரிகை செய்தியொன்று தெரிவிக்கின்றது இதனால், ஒரு திருப்புமுனையாக, இலங்கையிலேயே தடைகள் அகற்றப்படக்கூடிய நிலையும் ஏற்படலாம் என்பதை மறுக்க முடியாது 97ம் ஆண்டில் அமெரிக்கா விதித்த தடைக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் முன்னேற்றம் கண்டு வருகின்றன. இந்தியாவும் இரு ஆண்டுகளுக்கு ஒருதடவை தடையை புதுப்பிக்கின்றதேயன்றி அங்கு தடை நிரந்தரமானதல்ல இந்நிலையில், பிரிட்டனும் பாராளுமன்ற ஜனநாயகம் நடைபெறும் நாடு தமிழர்களும் ஒருசில பகுதிகளில் கனிசமானளவு வாக்குகளை கொண்டவர்கள். அடுத்த பரம்பரையின் நல்வாழ்வு அரசியல் ஞானிகளால் தீர்மானிக்கப்படுவதாயினும், அவர்களையுமுள்ளடக்கிய அரசியல் கட்சிகளே தேர்தலைச் சந்திக்கப்போகின்றன.

# நாணய மிதப்பினால் ஏற்படும் தாக்கம்

# சமாதானத்தை ஏற்படுத்த வழிவகுக்குமா?

கடந்த புதன் கிழமை யாழ் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற முழுநிலாக் கருத்தரங்கில் கலந்து கொண்டு இலங்கை ரூபாவில் ஏற்பட்ட வீழ்ச்சி அதன் விளைவு தொடர்பாக யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் ப.சிவநாதன் பொருளியல் ஆசிரியர் வே. சருணாசரன் ஆகியோர் தெரிவித்த கருத்தின் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.

(ஆ-ர்)

நீண்ட காலங்களாகபொருளாதாரத் தாக்கங்களை தன்னுள்ளே சமாளித்து வந்த இலங்கை அரசு அதன் தாக்கத்தினை மேலும் சமாளிக்க முடியாததினால் நாணயப் பெறுமான நிர்ணயத்தை சுதந்திரமாக விட்டுள்ளது. இதனாலேயே நாணயப் பெறுமதி மிகமோசமாகக் கீழிறங்க வேண்டியிருந்தது.

இந்நாணய மிதப்பு நடவடிக்கையின்மூலம் இலங்கை எவ்வளவு பொருளாதார சுமைகளுடன் இருந்துவந்துள்ளது. இருந்து வருகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இலங்கை ஒருவளம்பொருந்திய பொருளாதார நாடாக இருந்திருந்தால் அல்லது பொருளாதார நிலைமையை தாங்கிக் கொள்ளக்கூடியசூழ்நிலை இருந்திருக்குமேயானால் ஒரு பாரிய தாக்கத்தினை நாடளாவியரீதியில் ஏற்படுத்தியிருக்காது.

### சிங்கள மக்களின் நிலை

இன்று நடந்து வரும் யுத்தத்தினால் ஏற்பட்ட பல்வேறு விதமான நெருக்கடிகளின் மத்தியில் பொருட்களுக்கு அதிகவிலை கொடுத்து வாங்கிய தமிழ் மக்களுக்கு இத்திடீர்விலையேற்றம்பாரிய தாக்கமாக சிந்திக்க மாட்டார்கள். ஏனெனில் அச் சூழ்நிலையில் நீண்டகாலமாக வாழ்ந்து பழகி விட்டார்கள். ஆனால் இதே தாக்கத்தினை சிங்கள மக்களால் எள்ளளவேனும் ஜீரணிக்கமுடியாது.

தொகுத்தவர்

**வி. ஜெயன்**

காலை 31 ரூபாவிற்கு வாங்கிய சீனியை மாலை 38 ரூபாவிற்கும் அதிகவிலை கொடுத்து வாங்கும் போதே யுத்தத்தின் விளைவினை சிங்களமக்கள் முதல் முதல் அனுபவிக்கின்றார்கள் என்று கூற வேண்டும் ஏனெனில் திடீர் விலையேற்றத்தினால் அவர்களின் வாழ்க்கைச் செலவில் பாரிய மாற்றத்தில் வாழ்ந்த சூழ் நிலை இல்லை.

### சமாதானத்திற்கு வழிவகுக்கும்?

இதனாலேயே போரின் தாக்கத்தினை உடனடியாக தாங்கிக் கொள்ளும் நிலையில் இல்லை. இச்சூழ் நிலையானது இலங்கையின் சமாதானத்திற்கு வழிவகுக்கும். நாணய பெறுமதி சுதந்திரமாக மிதக்கவிடப்பட்டதால் பாதிப்படையப் போகிறவர்கள் தென்பகுதி சிங்கள மக்களே. இச்சூழ் நிலையை தாங்கிக் கொள்ள முடியாத அவர்கள் முதற்கட்டமாக விலையுயர்விற்கு எதிராக கண்டியிலிருந்து கொழும்பிற்கான யாத்திரையினை மேற்கொண்டுள்ளனர். இன்று இத்திடீர் மாற்றத்தின் காரணத்தால் சிங்கள மக்களும் போரை நிறுத்துவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய சூழ் நிலையினையே அரசு ஏற்படுத்தியுள்ளது என்பது வரவேற்கத்தக்க தொன்றாகும்.

### எரிபொருள் விலை ஏற்றம்

இலங்கையின் பொருளாதாரம் நலிவுற்றிருக்கும் இக

→6ஆம் பக்கம் பார்க்க

நங்கையின் புன்னகை
விதுஷாவின்
பொன்னகையில்
உங்களின் எண்ணம் அதுவே
**விதுஷாவின்**
கைவண்ணம் - நாடுங்கள்
தீவக மக்களின் நலன் கருதி
ஊர்காவற்றுறையில்
உங்கள்
**விதுஷா**
நகைமாடம்
(கி/1470)

# அனுருத்த-ஜயரத்தின முறுகல் நிலை

# ஜனாதிபதிக்கு ஜயரத்தின கடிதம்

(கொழும்பு)

எரிபொருள் மின் சக்தி அமைச்சரும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்தரத்வத்தவுக்கும், காணி விவசாய அமைச்சரும், பொதுஜனஐக்கிய முன்னணியின் செயலாளருமான டி.எம். ஜயரத்னவுக்கும் இடையிலான மோதல் நிலை கட்டு மீறி அமைச்சர் அனுருத்தரத்வத்த மீது விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு கடிதமொன்றை அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அமைச்சர் ஜயரத்ன அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அமைச்சர் அனுருத்தரத்வத்த முன்னாள் ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்தவர் என்றும் நான் 1958ம் ஆண்டு முதல் சுதந்திரக்கட்சியில் இருந்து வருகிறேன் என்றும், இது தொடர்பாக உடன் விசாரணை நடத்த வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த வாரம் அனுருத்தரத்வத்த தலைமையில் கூடிய குழுவினர் அமைச்சர் ஜயரத்தினவுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தவேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது;

இரு அமைச்சர்களும் ஒருவரை'யொருவர்சாடி வருவதினால் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும் இக்கட்டான நிலை ஏற்பட்டிருப்பதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

# மின்மாற்றி பழுதடைந்தது இன்றும்பகல்நேர மின் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்திப் பகுதிகளில் அமைந்துள்ள மூன்று மின் மாற்றிகளில் ஒன்று பழுதடைந்துள்ளதால் இன்று காலை முதல் மாலை வரை மின்சாரம தடைப்பட்டிருக்குமென மின்சார சபை உயர் அதிகாரி கணநாதன் தெரிவித்துள்ளார்.

மின்மாற்றி திருத்தும் பணி துரித கதியில் மேற்கொள்ளப்படுவதாகவும், அதுவரை யாழ்ப்பாணப் பகுதிக்கான மின்விநியோகத்தில் மூன்றிலொரு பகுதிக்கே மின்சாரம் வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

# பிரிட்டன் ஓரிரு மாதங்களுக்குள் புலிகளைத் தடை செய்துவிடும்

## லக்ஷ்மன் கதிர்காமர்

இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் புலிகள் அமைப்பை பிரிட்டன் அரசு தடைசெய்துவிடும்என இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் திர்காமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புலிகள் அமைப்பை தீவிரவாத அமைப்பாக அறிவித்து, அதனை பிரிட்டனில் தடைவிதிக்க வேண்டும் என்று பிரிட்டன் அரசை இலங்கை அரசு தொடர்ந்தும் வற்புறுத்தி வந்தது.

இலங்கை அரசின் வேண்டுகோளை ஏற்று, பிரிட்டன் தீவிரவாத அமைப்புக்களின் பட்டியலைத் தயார் செய்தது;

இப்பட்டியலில் புலிகள் இயக்கத்தின் பெயரும் இடம் பெற்றுள்ளதுடன் இவ்வியக்கங்களுக்கு பிரிட்டனில் தடை விதிக்கப்படும் என பிரிட்டன் அறிவித்திருந்தது.

எனவே இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் பிரிட்டன் புலிகள் இயக்கத்தை தடை செய்துவிடும் என தான் நம்புவதாக டோஹாருற்கு விஜயம் செய்துள்ள இவர் கல்ஃப நியூஸ் சஞ்சிகைக்குப் பேட்டி அளிக்கையில் தெரிவித்துள்ளார். (செ)

# விமானம் தரையிறங்குகிறது

(கொழும்பு)

இலங்கை விமானப்போக்குவரத்துக் கம்பனிக்குச் சொந்தமான ஏ 340 ரக விமானத்தின் சில்லில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து லண்டனுக்கு புறப்பட்ட இவ்விமானம் அவசர அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தின்போது விமான ஓட்டியின் சாதுரியத்தால் பயணிகளுக்கு எவ்விதமான ஆபத்தும் ஏற்படவில்லை. (இ-5)

### அன்ரன்--

றுக்கொள்ளவிசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

இதேவேளை மேற்படி சம்பவம் இலண்டனில் இடம்பெறவில்லையென இலண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் தகவல் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் இச் சம்பவத்தை விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான ''புலிகளின் குரல்'' உறுதிப்படுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் வீட்டுக்கு பூரண பொலிஸ் பாதுகாப்பு வழங்க பிரித்தானிய அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளது. (இ- செ- 5)

### குழாய்க்குள் ---

மேலும் தெரியவருவதாவது;

கடந்த சனிக்கிழமை காலை இடம் பெற்ற இச்சம்பவத்தின் போது பாம்பு தீண்டிய இச் சிறுமி கதறியழுத படி பெற்றோரிடம் சென்ற போதும் பெற்றோர் நிலமையை புரிந்து கொள்ளவில்லை சிறிது நேரத்தில் சிறுமி மயக்கமடைந்த போது நித்திரை என எண்ணிய பெற்றோர் மாலை நேரமாகியும்எழும்பாதநிலையில்ஆஸ்பத்திரிக்கு பிள்ளையைஎடுத்துச் சென்றனர். அதன்போது பிள்ளைமரணமடைந்திருந்ததை அறிய முடிந்தது.

பிரேத பரிசோதனையை திடீர் மரணவிசாரணை அதிகாரி திருமதி இளங்கோவன் மேற்கொண்டார் பொலிஸ் விசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-12)

### நோர்வே---

அரசியல் தலைவர்களை சந்தித்து பேசுவார். இச்சந்திப்பின்போது இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையிலான அரசியல் நல்உறவுகள் குறித்து ஆராயப்படுவதுடன், இலங்கையின் உள் நாட்டு விவகாரம் குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளது. (இ-5)

### புலிகளை---

ரிகா விடுதலைப் புலிகளைப் பிரிட்டன் தடை செய்வது தொடர்பாக வெளியிட்டிருக்கும் கருத்துக்கும் இடையே சுமுகமான தீர்வுஒன்றுக்கான தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டன் விடுதலைப் புலிகளைத் தடை செய்தால் சமாதான முயற்சிகள் பாதிக்குமென அவ் வியக்கம் கூறிவருவதை ஜனாதிபதி சந்திரிகாகுமார துங்கா நிராகரித்துள்ளார்.

ஐரிஸ் குடியரசு இராணுவம் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த அமைப்புடன் பிரிட்டிஷ் அரசு பேச்சு வார்த்தை நடத்தியதென்பதை நோர்வேயின் விசேட தூதுவர்எரிக்சோலிடம் ஜனாதிபதி எடுத்துக்கூறியுள்ளார்.

தமது அமைப்பு பிரிட்டனில் தடைசெய்யப்பட்டால் சமாதான முயற்சியிலிருந்து விலக நேரிடும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அண்மையில் பத்திரிகையொன்றுக்கு வழங்கியபேட்டியை அடுத்தே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இவ்வாரம் கொழும்பு வரவுள்ள நோர்வேயின் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் இருசாராருக்குமிடையே எப்படியாவது, பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென்ற தனது குறிக்கோளை நிறைவேற்ற முயற்சிப்பார் என்றும் - புலிகளின் யுத்த நிறுத்த காலக்கெடு முடிவடைவதற்குஇன்னமும் 12தினங்கள் இருப்பதால் இது சாத்தியமாகலாம் என்றும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

### அமைச்சர்களுக்கு...

அதிகரித்துள்ளது.

ஒருஅமைச்சரின் வருடாந்த செலவீனம் 224லட்சருபாவாகவும்,பிரதிஅமைச்சருக்கானசெலவீனம் 107லட்சம் ரூபாஎனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அமைச்சர்களின் பாதுகாப்புச் செலவு, சம்பளம், வாகனவரி பொருள், தொலைபேசிக் கட்டணம்என்பன இவற்றில் அடங்கும்என தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)

### இலங்கை---

இதே வேளை இலங்கை இராணுவத்திற்கு ஆலோசனை வழங்க உயர்மட்ட இராணுவக் குழு ஒன்றை பாகிஸ்தான் அனுப்பியுள்ளது.

லெப்டினன்ஜெனரல்முகமத் யுசிர்க்கான் தலமையில்அனுப்பப்பட்டுள்ள குழுவில் பல இராணுவ உயர் அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர். (ந-5)

### காணாமல்---

மீரிகானையைச் சேர்ந்த மகிந்தகுமண, வாதுவையைச் சேர்ந்த பிரேமச்சந்திரா ஆகிய இரு இராணுவத்தினருமே கடந்த சனிக்கிழமை மீண்டும் இராணுவத்தினருடன் சேர்ந்துள்ளனர்.

இந்த இரு இராணுவத்தினரும் பலாலி இராணுவ வைத்தியசாலையில் வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பூரண விசாரணைக் குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

மீண்டும் இராணுவத்தினருடன் சேர்ந்துகொண்டஇருவரும் கருத்துத்தெரிவிக்கையில் புலிகள்சோரன் பற்றுப்பகுதியைக் கைப்பற்றியபின்தாங்கள் இருவரும் காட்டுப் பிரதேசங்களில் மறைந்திருந்து காலத்தைக் கழித்ததாகத் தெரிவித்தனர். (வ)

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள
**நியூ நகுலா**
**ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[கி-1477]

# புதிய அரசியல்கட்சி உதயம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிய தலைவர்களால் புதிய அரசியல் கட்சியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய மாற்று முன்னணியென அழைக்கப்படும் இக்கட்சியின் தலைவராக விஜயபால மெண்டிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடைப்பிடித்து வரும் கொள்கைகளே கட்சிப் பிரிவுக்கும்' புதியகட்சி அமைக்கப்பட்டமைக்கும் காரணமென மாற்று முன்னணியின் தலைவர் விஜயபாலமெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளைஇப்புதிய கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு பூரண ஆதரவை வழங்குமெனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலமைத்துவத்துக்கும் அதன்கொள்கைக்கும் எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமெனவும் தெரிவிக்கப்படுகிறது; (செ)

## மண்சரிவினால் 45 பேர்பலி

இந்தோனேசியாவின்ஜாவா தீவில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக நாற்பத்தைந்து பேர் பலியாகியுள்ளனர்.

ஜாவாத் தீவில் கடந்த சிலநாட்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழைகாரணமாகவே இம் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. (செ)

# வருடாந்த மஹோற்சவம்

துன்னாலை கோவிற் கடவை பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (செ-39)

**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
அப்பாஸ் மாதவன்
லைலா விவேக்
நடித்த
மின்னலே
10-30, 2-30 (ப. நே)
(கி/1439)

அழகுக்கு மெருகூட்டும்
22 கரட் தங்கத்தில்
ஓடர் நகைகளை
சிறந்த முறையில்
செய்து பெற்றிட
**சாரங்கன்**
**நகைமாடம்**
45. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-1478]

# வாழ்த்துகின்றோம்

வலம்புரிப் பத்திரிகையின் உதவி ஆசிரியராகக் கடமையாற்றி பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றுச் செல்லும்

**க. கணேசராசா (B A)**

(நீர்வேலி)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- வலம்புரிக்குடும்பம்

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது